සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Catholic

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	**கத்தோலிக்கத் திருமறை**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(01) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. குறிப்பிட்ட தினங்களில் தரைவாழ் உயிரினங்கள், மிருகங்களின் இறைச்சியை உண்ணாதிருப்பது,
1. ஒரு சந்தி ஆகும்.
2. நோன்பிருத்தலாகும்.
3. கட்டளையாகும்.
4. மாமிசத் தவிர்ப்பாகும். (சுத்த போசனம்)

02. இயேசு தோற்றம் மாறுதலின் முன்பு தன்னோடு அழைத்துச் சென்றவர்கள்.
1. பேதுரு, யாக்கோபு, யோவான்
2. அந்திரேயா, யாக்கோபு, மத்தியா
3. யோவான், பேதுரு, சீமோன்
4. சீமோன், அந்திரேயா, யோவான்

03. "எங்கள் அனுதின உணவை இன்று எமக்கு அளித்தருளும்" இங்கு அனுதின உணவு என கூறப்படுவது,
1. மன்னா, இறைவார்த்தை
2. நற்கருணை, இறைவார்த்தை
3. புளியாத அப்பம், மன்னா
4. புளியாத அப்பம், நற்கருணை

04. லூர்து நகரில் மரியன்னை காட்சியளித்தது,
1. டொமினிக்குஸ்மான் அடிகள்
2. ஜெசிந்தா
3. பெர்ணதேத்
4. பிரான்சிஸ்

05. புனித கன்னி மரியாளின் அமல் உற்பவத் திருநாள் கொண்டாடப்படுவது,
1. தை 01ம் திகதி
2. ஆவணி 15ம் திகதி
3. மார்கழி 08ம் திகதி
4. டிசெம்பர் 25ம் திகதி

06. இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி நினைவுப்படுத்தும் செபம்.
1. பாஸ்கு கால மூவேளைச் செபம்
2. மூவேளைச் செபம்
3. விசுவாசப் பிரமாணம்
4. இயேசு கற்பித்த செபம்

07. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள செபப் புத்தகம் எது?
1. தொடக்க நூல்
2. எண்ணிக்கை
3. தானியேல்
4. திருப்பாடல்

08. அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணத்தில் உள்ளடங்கும் சத்தியங்கள் எத்தனை?
1. 4 ஆகும்
2. 8 ஆகும்
3. 12 ஆகும்
4. 14 ஆகும்

09. தூய ஆவியின் வரம் கிடைப்பதை அடையாளப்படுத்துவது,
1. வெள்ளைத் துணி
2. மெழுகுவர்த்தி
3. நீர்
4. புனித எண்ணெய்

10. இயேசுவினால் திருத்தூதருக்கு அளிக்கப்பட்ட தூதுப்பணியைத் தொடரந்து செய்வதற்குத் தேவையான இறையருள் கிடைப்பது,
1. உறுதிப்பூசுதலின் மூலம்
2. திருமுழுக்கின் மூலம்
3. திருமணத்தின் மூலம்
4. குருத்துவத்தின் மூலம்

(2 x 10 = 20 புள்ளிகள்)

Past Papers Wiki

(02) 11 – 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

(அருளடையாளங்களை, மண்ணுலகை, ஜெரூசலேம் ஆலயத்திற்கு, மாற்கு, ஐந்நூல்)

11. திருவிவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் ..... என அழைக்கப்படும்.

12. திருமுழுக்கு யோவானின் போதனையின் விபரங்களோடு ஆரம்பித்துள்ள நற்செய்தி ..... ஆகும்.

13. பலுகிப் பெருகி ..... நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் என்றார்.

14. யூத வழக்கப்படி இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவிற்காக ..... சென்றார்கள்.

15. ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியடைவதற்கு ..... பெற்றுக் கொள்ள வேண்டும்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

(03) 16 – 20 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.

16. உடல் ரீதியாக நாம் நலிவடையும் போது ஆன்மீக ரீதியான சக்தியைப் பெற்று ஆன்மீக, உடல் சுகத்தைப் பெற நோயில் பூசுதல் அருளடையாளம் வழங்கப்படுகிறது (.....)

17. திருமணமானவரோடு முறையற்ற உறவு கொண்டிருக்கக் கூடாது பற்றி எட்டாவது கட்டளையில் கூறப்படுகிறது. (.....)

18. மறைக் கல்வி வகுப்புக்களுக்குச் சென்று இறைவனைப் பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்வது சிறந்த பண்பாகும். (.....)

19. புனித இஸ்தேவான் "ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" எனக் கூறி உயிர்விட்டார். (.....)

20. நாம் இறைவனோடு எளிமையாக செபிக்கக் கூடாது. (.....)

(2 x 5 = 10 புள்ளிகள்)

අ.පො.ස [illegible] ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් [illegible] Past Papers Wiki [illegible] [illegible]

பகுதி – II

- **பகுதி இரண்டில் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01) எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடை தருக.
1. உலகப்படைப்பின் போது கடவுளால் படைக்கப்பட்ட இரு பெரும் ஒளிப்பிழம்புகளும் எவை?
2. பணிவாழ்வின் அருளடையாளங்கள் இரண்டும் எவை?
3. சுத்த போசனம் அனுசரிக்கும் தினங்கள் இரண்டு குறிப்பிடுக.
4. இறை தந்தையிடம் இடைவிடாது மனந் தளராமல் செபிக்க வேண்டும் என இயேசு கூறிய இரு உவமைகளைக் குறிப்பிடுக.
5. பொதுச் செபங்கள் இரண்டு குறிப்பிடுக.
6. செபத்தின் வகைகள் நான்கில் இரண்டினைக் குறிப்பிடுக.
7. மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்கள் இரண்டு குறிப்பிடுக.
8. பாத்திமா நகரில் மரியன்னை யாருக்கு காட்சியளித்தார்?
9. இயேசு தம் வீட்டுக்கு கற்பித்த செபம் யாது?
10. முதலாம் கட்டளையில் சீடருக்கு எதிரான செயல்கள் இரண்டு தருக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. திருவிவிலியத்தின் பிரதான இரு பகுதிகளும் எவை?
2. தொடக்க நூலில் கூறப்படும் விடயங்கள் மூன்று குறிப்பிடுக.
3. திருவிவிலியத்தை வாசிப்பதனூடாக நீர் அடையும் பயன்கள் ஐந்து குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. உலகப் படைப்புக்கள் இரண்டினை எழுதுக.
2. கடவுள் மனிதரிடம் ஒப்படைத்த கடமைகள் அல்லது பொறுப்புக்கள் மூன்று குறிப்பிடுக.
3. இறைபடைப்பினை பாதுகாக்க நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்து குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. திருச்சபையின் கட்டளைகள் இரண்டு எழுதுக.
2. ஒரு சந்தி அனுசரிப்பதற்கான நோக்கங்கள் மூன்று தருக.
3. கிறிஸ்தவ மாணவர்களாகிய நீர் ஏழை எளியவர் மட்டில் நீர் செய்யக்கூடிய நற்செயல்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. இயேசு செபித்த சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
2. இயேசு கற்பித்த செபத்தில் உள்ளடங்கப்பட வேண்டிய பண்புகள் ஐந்தில் மூன்றைக் குறிப்பிடுக.
3. இறைவனுக்கு நன்றி கூறி செபம் ஒன்று எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. மரியன்னையின் திருநாட்கள் இரண்டு எழுதுக.
2. பொதுச் செபத்தின் பயன்கள் மூன்று குறிப்பிடுக.
3. அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணம் செபத்தினை எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. அருளடையாளங்கள்
2. தியானம்
3. உலகப்படைப்பு
4. பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமை

(5 + 5 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
www.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank